**செய்தி வெளியீடு எண்:40** **நாள்:21.01.2021**

**செய்தி வெளியீடு**

**அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம்**
**குடிமைப் பணிகளுக்கான (ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்)**
**2021 ஆம் ஆண்டு முதல் நிலைத் தேர்வுக்கான பயிற்சியில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வு**

2021 ஆம் ஆண்டில் மத்திய தேர்வாணையக் குழு (UPSC) நடத்தும் குடிமைப் பணிகளுக்கான முதல்நிலைத் தேர்வு (Preliminary Examination-2021) எழுதுவதற்கு, அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் தேர்ந்து பயிற்சி பெற ஆர்வமிக்க, தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களிடமிருந்து இணையதள வழியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. அதன் படி, **6699** விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கான நுழைவுத் தேர்வு **16** மையங்களில் **24.01.2021** அன்று கோவிட்–19 தொடர்பாக அரசு வகுத்துள்ள வழிமுறைகளை பின்பற்றி நடைபெற உள்ளது. இத்தேர்வில் முறைகேடுகள் ஏதும் நடைபெறாமல் இருக்க பறக்கும் படைக் குழு அமைக்கப்பட்டும், பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டும் உள்ளனர்.

தற்பொழுது மத்திய தேர்வாணையக்குழு (UPSC) நடத்திய குடிமைப்பணிகளுக்கான முதன்மைத் தேர்வில் அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் இருந்து **86** மாணவர்கள் தேர்வு எழுதினர். அவர்கள் தேர்வு மையத்திற்கு சென்று வர பேருந்து வசதியும் சிற்றுண்டியும் மதிய உணவும் ஏற்பாடு செய்யப்பட்டன. அவர்கள் சிறப்பாக தேர்வு எழுதியுள்ளனர்.

கூடுதல் தலைமை செயலர்/இயக்குநர்
மற்றும் பயிற்சித் துறைத் தலைவர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**